www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

பிரான்ஸ் பணியகம்

*பெரும் மண்மீட்புச் சமராக உருவெடுத்து சிங்கள இராணுவ - அரசியல் அமைப்புக்களை சிதைத்துவரும் ஓயாதஅலைகள் 3ன் எழுச்சியையொட்டி தமிழீழத்தில் எமது தலைமைப் பணிமனையால் விடுக்கப்பட்ட அறிக்கை பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களின் எழுச்சி கருதி இங்கே மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.*

*23.06.2000* — *வெளியீட்டுப் பிரிவு*

## எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலின் கீழ் அனைவரும் அணிதிரண்டு இன்றே புறப்படுவோம்!

# எமது விடுதலைப் போராட்டமானது மிகவிரைவில் இறுதி இலக்கை அடைந்துவிடும்!

எமது தேசிய இன விடுதலைப் போராட்டமானது தற்போது முழு அளவில் முனைப்புப்பெற்று புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்பட்டு எமது தேசியத் தலைவரின் நேரடி வழிகாட்டலில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஓயாத அலைகள்-3 தாக்குதல் நடவடிக்கையின், வெற்றிகள் உலகின் கவனத்தை எல்லாம் எமது போராட்டத்தின்பால் திருப்புவதற்கு வழி செய்துள்ளன. இன்று சர்வதேச அரங்கில் உன்னிப்பாக உற்று நோக்கப்பட்டு வரும் ஓர் முக்கிய பிரச்சினையாக தமிழர் பிரச்சினை மாறிவிட்டது. தமிழ் மக்களின் நியாபூர்வமான இப் போராட்டமானது முன்னர் எப்போதும் இருந்திராதளவிற்கு தற்போது சர்வதேச மட்டத்தில் அலசி ஆராயப்பட்டு விவாதிக்கப்படும் ஒரு முக்கிய விடயமாக மாறிவிட்டது. அந்தவகையில் தமிழர் போராட்டமானது இன்று ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது.

ஓயாத அலைகள்-3 தாக்குதல் நடவடிக்கையின்போது, எமது தேசியத் தலைவர் பயன்படுத்திவரும் போர் உத்திகள், இராணுவத் தந்திரோபாயங்கள், படை நகர்த்தல்கள் யாவும் உலகின் தலைசிறந்த இராணுவ விற்பன்னர்கள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன. தீர்க்கதரிசனமான நோக்குடன் திறமையான திட்டமிடலில், தந்திரோபாய ரீதியில் எமது தலைவர் மேற்கொண்டுவரும் தாக்குதல் புகழ்மிக்க இராணுவ நிபுணர்களினால் கூட புரிந்து கொள்ள முடியாததாகவும், எதிர்வு கூறிக்கொள்ள முடியாததாகவும் இருந்துவருகின்றன. இத்துணை தலைசிறந்த ஓர் தலைமையின் வழிநடத்தலின் கீழ் தொடர்கின்ற எமது இன விடுதலைப் போராட்டமானது மிகவிரைவில் இறுதி இலக்கை அடைந்தவிடும் என்பது உறுதி.

எமது மக்களின் வாழ்வாதாரங்கள் யாவற்றையும் சிதைத்து, அவர்களை சொந்த இருப்பிடங்களில் இருந்து விரட்டியடித்து சொல்லொணாத் துன்ப, துயரங்களுக்கு உட்படுத்தி எமது தாயக நிலப்பரப்பையெல்லாம் ஆக்கிரமிப்பதற்கும், அங்கு தொடர்ச்சியாக நீண்டகாலம் நிலை கொண்டிருப்பதற்கும் சிங்கள அரசின் படைகள் கனவு கண்டன. தமிழர் பிரதேசங்களை திறந்த வெளிச் சிறைக்கூடங்களாக மாற்றி ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயத்தையே அழித்தொழிக்கும் நோக்கில் திட்டமிட்ட இன அழிப்புச் செயற்பாடுகளை எமது மண்ணில் சிங்கள இராணுவம் புரிந்து வந்தது. ஆனால், ஓயாத அலைகள்-3 அவையாவற்றுக்கும் ஓர் முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பால் தமது சொந்த நிலப்பரப்புக்களை இழந்து இடம்பெயர்வு வாழ்வால் அவதியுற்று பல நெருக்குவாரங்களின் மத்தியில் வாழ்ந்துவருகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களின் துன்பந்தோய்ந்த அவல வாழ்நிலையை முடிவுக்கு கொண்டுவரவும் மீண்டும் ஒரு வசந்தமான வாழ்வை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் ஓயாத அலைகள்-3 வழிசமைத்து கொடுத்து வருகின்றது.

சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு பலம்பொருந்திய கோட்டைகளாக மாற்றியமைக்கப்பட்டிருந்த எமது தாயக நிலப்பரப்பு யாவும் எமது படையணிகளின் தீரமிகு தாக்குதல்களால் விரைவாக மீட்கப்பட்டு வருகின்றன. இராணுவ ரீதியில் பலம்மிக்கதாகக் கருதப்பட்ட படைத்தளங்கள் எல்லாம் எமது தேசியத் தலைவரின் தந்திரோபாய ரீதியிலான தாக்குதல் திட்டமிடல்களால் இலகுவாகவே வெற்றிகொள்ளப்பட்டு வருகின்றன. நீண்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காலத்திற்கு எம்மண்ணில் நிலையூன்றி இருப்பதற்கு கனவு கண்ட எதிரி இன்று நிலைதடுமாறி உளவியல் ரீதி பெருமளவில் பாதிப்படைந்து எமது தாயகமண்ணை விட்டு தப்பியோடத் தொடங்கியுள்ளான். அவன் நின்று நி னித்து திட்டமிட்டு செயற்படுவதற்கு கால அவகாசம் எதனையும் வழங்காது நாம் எமது தாக்குதல்களை வி படுத்தவேண்டும். ஆளணிகளை அதிகரிப்பதன் மூலம் பலமான எமது அணியை மேலும் பலப்படுத்த முடியும். காலத்தில் பல முனைகளில் எமது தாக்குதல்களை விரிவு படுத்தவும் எமது மண் மீட்பை விரைவுபடுத் ஆயுதம் ஏந்திப் போரிடும் ஆற்றல் மிக்க அனைவரும் எமது அணியில் சேர்ந்துநின்று செயற்படுவது இன்ன காலகட்டத்தில் இன்றியமையாத ஓர் பணியாகும். இதுவோர் வரலாற்றுக்கடமை என்பதனைக் கருத்திற்கொ அனைவருமே பொறுப்புணர்வுடன் இதனைச் செய்து முடிப்பதற்கு திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

இன்று பல்வேறு வகைகளிலும் சிதைந்துபோயுள்ள இராணுவக் கட்டமைப்பை மீளக் கட்டியமைப்பதற்காக உளவியல் ரீதியாக பாதிப்படைந்திருக்கும் படையினருக்குப் புத்தூக்கத்தைக் கொடுப்பதற்காகவும் சிறில அரசு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. போரை வெல்வதற்கெனக் கூறிக்கொண்டு வெளி களிடம் இருந்து ஆயுதம் மற்றும் நிதியுதவிகளைக் கோரி நிற்கும் சந்திரிகா அரசு உள்நாட்டில் போர்ப்பி னத்தை மேற்கொண்டு இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பைத் தீவிரப்படுத்தியும் பாதுகாப்புச் செலவீனத்திற் நிதி சேகரிப்பை அதிகப்படுத்தியுமுள்ளது. பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு எமது தாயகமண் ஆக்கிரமிப்பதற்கும், எமது தாயக மக்களை அழித்தொழிப்பதற்கும் சிங்கள அரசு கங்கணம் கட்டிநின்று செ பட்டு வருகின்றது. அதாவது சிங்கள தேசம் தனது சகல வளங்களையும், அனைத்து பிரஜைகளின் உழைப்பை தமிழ் இனத்தின் அழிப்பிற்குப் பயன்படுத்தத்தொடங்கிவிட்டது. இந்நிலையில் எதிரியின் எத்தகைய தாக்குத ளுக்கும் தக்க பதிலடிகொடுக்கத்தக்க ஓர் பலமான அணியாக நாம் எந்த நேரமும் தயார் நிலையில் இரு வேண்டும். எமது மக்களின் முற்று முழுதான பங்களிப்பினால் எம்மால் எத்தனை பெரிய படையணிகளை வெற்றிகொள்ள முடியும். ஆற்றல் மிக்க அனைவரும் ஆயுதமேந்தி எமது இலக்கை அடைந்திடுவோம் என் உறுதி.

இன்று மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக பரிணாம வளர்ச்சி கண்டுள்ள எமது தேசிய இனவிடுதலை போரில் மக்கள் படையின் பங்களிப்புகள் அளப்பரியன. எமது பல்வேறு பட்ட படையணிகளின் செயற்பாடு எதிரிப்படையணிகளை உளவியல் ரீதியாக கிலிகொள்ளச் செய்துள்ளன. களத்திலே எமது வீரர்கள் புரி வருகின்ற துணிவான, தீரம்மிக்க தாக்குதல்கள் எதிரிப்படையணியை நிலைகுலையச் செய்தும் புறமுதுகிட்டோ செய்தும் வருகின்றன. எமது படையணிகளின் ஆக்ரோசமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத எதி படையணிகள் யாவுமே தோல்விமேல் தோல்வி கண்டு எமது மண்ணைவிட்டு ஒடத்தொடங்கியுள்ளன.

எந்தவோர் வெளிநாட்டுச்சக்தி உதவிக்கு வந்தாலும், எப்பேர்ப்பட்ட நவீனரக ஆயுதங்களை அரசு வாங் கொடுத்தாலும் உறுதி தளராத புலியணியின் தாக்குதலின் முன் தம்மால் நின்று தாக்குப்பிடிக்க முடியாது பதை இராணுவத் தரப்பில் பலர் தெளிவாகவே தெரிந்துகொண்டுள்ளனர். தமிழர் தாயக நிலப்பரப்பில் தொ தும் நிலைகொண்டு இருப்பது இனிவரும் நாட்களில் சாத்தியமான ஒரு விடயமாக அமையாது என்பதை அவர்கள் புரிந்துகொண்டு உள்ளனர். இருப்பினும் அரசியல் தலைமைகளின் சுயநலனுக்காகவும், வரட் கௌரவத்திற்காகவும் சிங்கள இராணுவம் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவதுதான் உண்மையான நிலைப்பா உள்ளது. இதனை இராணுவத்தின் உயர் அதிகாரிகளே ஏற்றுக்கொண்டுமுள்ளனர். அதேவேளை, நாம் இராணு பலத்தில் சிறீலங்கா படையினரைவிட மேலோங்கியிருப்பதை எமது தாக்குதல்கள் மூலமாக தொடர்ந் நிரூபித்துக்கொண்டு வருகிறோம். யாழ்.குடாநாட்டில் இருந்து மட்டுமல்ல, எமது தாயக நிலப்பரப்பின் ச பகுதிகளிலிருந்தும் ஆக்கிரமிப்புப்படைகளை விரைவாக விரட்டியடிப்பதற்கு நாம் உறுதி கொண்டுள்ளோம். எ தாயகத்தை விடுவித்து எமது மக்களுக்கென்றோர் சுதந்திர தேசத்தை அமைத்துக்கொடுக்கும் எமது விடுதலை போராட்டதிற்கு வலுச்சேர்க்கவும் எமது தேசவிடிவை விரைவாக்கவும் எமது தேசியத் தலைவரின் வழிகாட்ட கீழ் அனைவரும் அணிதிரண்டு எதிரிப்படைகளை எம் மண்ணிலிருந்து விரட்டியடிக்க இன்றே புறப்படுவோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.**

# கிட்டம்மான் 2000 நிதியத்தை பலப்படுத்துங்கள்!

*பெருவெற்றிக்குப் பங்களிக்க வாக்களித்த தமிழீழ மக்களே!*

*உங்கள் உறுதிமொழிகளை பங்களிப்புக்களாக்கிடுங்கள்*

*இன்னமும் கிட்டம்மான் 2000 நிதியத்தில் இணையாதோரே!*

*வரலாற்றின் பெருவெற்றிக்கு உங்கள் உழைப்பும் பங்காகட்டும் – துரிதமா உங்கள் பங்களிப்புக்களை வழங்கிடுங்கள்.*